திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடைப் பந்து விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டிருப்பது உண்மை. ஆனால், அந்த மைதானம் அமைக்கும்போதே அதற்கு மின் விளக்குகள் பொருத்திய நிலை வேண்டுமென்று ஏற்கனவே கேட்கப்பட்டது. மாலை நேரத்தில் தான் விளையாட முடியும். ஆகவே, மின் விளக்கு வசதிகள் வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். இன்னும் அந்தப் பணி நடைபெறவில்லை. எனவே, மின் விளக்கு பொருத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ரூ. 89,005 மதிப்பீட்டுச் செலவில் ஒளி விளக்கு பொருத்துவதற்காக சென்னை மாநகராட்சி மின்சாரத் துறையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றி. அந்த விளையாட்டுக் குழு நண்பர்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே கைப்பந்து விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டுமென்று ஏற்கனவே கேட்கப்பட்டது. எனவே அந்தக் கைப்பந்து விளையாட்டு மைதானத்தையும் அமைக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நன்றிக்கு நன்றி. இது கூடைப் பந்து பற்றிய கேள்வி. கைப் பந்து பற்றி தனியாகக் கேள்வி போடவும்.

இராமநாதபுரம் ஏர்வாடி தர்கா.

45—(*வினா எண் 9101)—டாக்டர் த. முகமது சலீம் மற்றும் திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடி கிராமத்தில் பல மதத்தினரும் வணங்கும் ஏர்வாடி தர்கா இருப்பதால், ஏர்வாடியை நகரியமாக எடுத்து சீர்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

1987 எப்ரல் 7]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏர்வாடி தர்காவானது பல மதங்களிலிருந்து, பல மாநிலங்களிலிருந்தும் அங்கு வந்து பிரார்த்தனை நடத்துவதற் குரிய இடமாக இருப்பதால் அங்கு சுகாதாரக் கேடும், மக்கள் தங்குவதற்கு இடையூறும் இருப்பதால் அந்த ஏர்வாடியை ஒரு நகரியமாக்க இனியாவது அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஏர்வாடி ஊராட்சியை நகரியமாக மாற்றுவது சம்பந்தமாக பிரேரணை ஏதும் இதுவரையில் வரப் பெறவில்லை. அப்படி வந்தால் அரசு ஆராயும்.

பெரியார் மாவட்டம், உக்கரம் ஊராட்சியைப் பிரித்தல்.

46—(*வினா எண் 9160) திரு. வே. ரு. சின்னசாமி: மாண்பு மிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உக்கரம் ஊராட்சியை, வண்டிபாளையம் ஊராட்சி, உக்கரம் ஊராட்சி என இரண்டாகப் பிரிக்க நட வடிக்கை எடுத்து முடிக்கப்பட்டும் நடைமுறைப்படுத்தப்பட வில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப் படுத்தப் படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பிரிப்பதற்கு முடிவு ஏதும் எடுக்கப்பட வில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.